**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S.No. 353 of 2015**

**நாள்.21.08.2026**

**வா.சா.2 - பாரதி கலை செல்வி**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2 ம் வாதியின் மகளும், பொது அதிகாரம் பெற்ற முகவரும் ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.11 | -- | வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டை | ஒளிநகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.12 | 31.06.2026 | 2 ம் வாதியால் தனது மகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.13 | 24.02.1986 | 2 ம் வாதியின் தகப்பனார் கடற்கரை பெயரிலான கிரைய ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.14 | 19.05.2008 | 2 ம் வாதியின் தாயார் பார்வதியம்மாள் 2 ம் வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்த பதிவு ஏற்பாட்டு ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.15 | 02.09.2015 | 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | பதிவு சான்றிட்ட நகல் |

(வா.சா.ஆ.14 ஆவணத்தில் 5 வது பக்கத்தில் மட்டும் கைரேகை உள்ளது, மற்ற பக்கங்களில் கீறல் என எழுதப்பட்டுள்ளது என்றும், மேலும் வா.சா.ஆ.15 ல் 9 வது பக்கத்திற்கு கீழாக 10 ம் தாள் திருத்தம் இல்லையென சொல்லப்பட்டுள்ளது, ஆனால்

மொத்தமாக 9 பக்கங்களைக் கொண்டது என்றும், வா.சா.ஆ.13 ஆவணத்தில் கீறல் என எழுதப்பட்டுள்ளது கைரேகை இல்லை என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது)

<u>**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.21 17:50:44 +0530